1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தேசிய நெடுஞ் சாலைகளாக ஆக்கும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து மத்திய அரசாங்கத் திற்குத் தெரிவிக்கப்படும். அவர்கள் ஒப்புக்கொண்டால் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கப்படும்.

ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலம்.

*588 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருவாரூர்–விஜயபுரத்தில் உள்ள "ஓடம் போக்கி" ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது திரு வாரூரில் மிக அதிகமான போக்குவரத்து ஏற்பட்டிருக்கும் காரணத் தால் இனிமேலாவது அந்த "ஓடம்போக்கி" ஆற்றின் குறுக்கே யுள்ள பாலத்தை அகலப்படுத்தி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் சொல்லுகின்ற அந்த இடத்தில் அப்ரோச் ரோடு 20 அடி அகலந்தான் இருக்கிறது. மேற்கொண்டு அகலப்படுத்த சாத்தியம் இல்லை. இரு மருங்கிலும் கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களை அப்புறப்படுத்த வேண்டும். ஆகவே, தற்போது அந்தப் பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் கிடையாது.

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர்

*566 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக்கு தலைவர் நியமிக் கப்படாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.

Tapioca Package Scheme at Killiyoor

* 290 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—